1972 மார்ச் 21]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற முறையை மாற்றியமைப்பதற்காக நிர்வாகச் சீர்திருத்தக்குழு ஆராய்ந்து வருகிறார்கள். நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கை வெளிவந்த பிறகு, அவர்கள் என்ன பரிந்துரைகள் செய்கிறார்கள் என்பதைப் பார்த்து, இது செய்யப்படும்.

நகராட்சிகளை மாநகராட்சியாக உயர்த்தல்

*600 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுவதற்கு வேண்டிய தகுதிகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒரு நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுவதற்கு வேண்டிய தகுதிகள் குறித்து விதிகள் எதுவுமில்லை. ஒரு நகராட்சியின் மக்கட்தொகை சுமார் ஐந்து இலட்சத்திற்குக் குறையாமலும், அதன் வருமானம் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் இருந்தாலும், அதன் மக்கள் மாநகராட்சி யாக மாற்றும்படி விரும்பினால், அந்நகராட்சி மாநகராட்சியாக மாறும் தகுதியைப் பெற்றுவிட்டதாகக் கருதலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, திருச்சி பகுதியில் திருவரம்பூர், திருவானைக்கோவில் போன்ற ஊர்களையும் இணைத்து மாநகராட்சியாக்கவேண்டுமென்று அந்தப் பகுதி பொது மக்கள் நீண்டகாலமாகச் சொல்லி வருகிறார்கள். ஆகவே பல தகுதிகளைப் பெற்று இருக்கிற திருச்சியை மாநகராட்சியாக மாற்று வதற்கு அரசாங்கம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி ஒரு நகராட்சி 5 லட்சத்திற்கு மேற்பட்ட மக்களைக்கொண்டதாகவும், 2 கோடி வருமானத்தைப் பெறுவதற்குரிய வகையிலும், மற்றும் பல்வேறு வசதி வாய்ப்புகள் பெறுவதற்குரிய அளவிலும், அதிகாரிகள் அதிகமாக நியமனம் செய்தால் அதைத் தாங்கிக்கொள்கிற வகையிலும் இருக்கவேண்டும். மாநகராட்சியாக மாற்றவேண்டுமென்பதற்காக திருச்சி நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை இணைத்துக்கொண்டால், அந்த மாநகராட்சி நல்ல விரிவான, வலுவான தன்மை பெறமுடியாது.

இப்போது மதுரை நகரை மாநகராட்சியாக மாற்றினோம் என்றால், அந்த நகரம் 5½ இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களையும், 2 கோடி வருமானத்தையும் பெறத் தக்க அளவுக்கு நிலையை அடைந் திருந்தது. அதே அளவுக்கு திருச்சி வரும் சூழ்நிலையில் அதைப்பற்றி கவனிக்கலாம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகராட்சியில் வருமானம் இருக்கிறது. மக்கள் தொகையும் ஏறத் தாழ இருப்பதன் பயனாக, கோவை நகராட்சி மன்றத்தில் அதை மாநகராட்சியாக மாற்ற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, கோவை நகராட்சியை மாநக ராட்சியாக மாற்றும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி தகவல் இல்லை. அப்படி ஒரு தீர்மானம் வந்திருக்குமானால் அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்யும். அதற்கான நிபந்தனை களுக்குட்பட்டு அமையுமானால் அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

(ஒரு உறுப்பினர் அவைக்குள்ளிருந்துகொண்டே பக்கத்தி லுள்ள அதிகாரிகள் இருப்பிடத்திலுள்ள ஒரு அதிகாரியிடம் பேசிக்கொண்டு இருந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் சட்ட மன்றத் திற்குள் இருந்துகொண்டு அதிகாரிகளோடோ, மற்றவர்களோடோ பேசுவது முறையானது அல்ல. அது தவிர்க்கப்படவேண்டும்.

கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்

* 601 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள Directorate of Rural Development. அலுவலகத்திற்கு வாடகை ஏதேனும் தரப்படுகிறதா?

(இ) ஆம் எனில், மாதம் ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.